**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.112/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 7 |
| Name (திரு/திருமதி) | : ராதாகிருஷ்ணன் |
| Father's Name/ Husband's Name | : சாமிநாதன் |
| Village & Taluk | : அனந்தபுரம் |
| Calling | : உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Age | : 66 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026**

2 மற்றும் 3ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

நான் செஞ்சி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்து கடந்த 2018ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 30.01.2018ம் தேதி செஞ்சி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 15.00 மணிக்கு அ.சா.1 அம்மனி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 94/2018 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii)–ன் கீழ் மு.த.அ பதிவு செய்தேன். . **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ–5–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அன்றைய தினமே 16.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பரசுராமன் மற்றும் மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் அம்மனி, பரசுராமன், ஜெயக்குமார், பரசுராமன் த/பெ. ஜெயராமன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் 1ம் எதிரி அன்பழகன் என்பவரை கடந்த 30.01.2018 அன்று 17.15 மணிக்கு பொன்பத்தி கிராமம் எதிரியின் வீட்டின் முன்பு வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மற்ற இரண்டு எதிரிகள் முன் பிணை உத்தரவு பெற்று பிணையில் சென்றுவிட்டபடியால் அவர்களை கைது செய்ய இயலவில்லை.

பின்பு அவர் இவ்வழக்கில் காயமடைந்த அ.சா.2 பரசுராமன் மற்றும் அ.சா.3 ஜெயக்குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சை வழங்கிய செஞ்சி அரசு ம.ம மருத்துவர் திரு. சரவணன் என்பவரை விசாரித்து அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச் சான்று பெற்றேன். மேற்படி காயச் சான்றில் அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சொற்ப காயம் என கூறி சான்று வழங்கினார்.

பின்பு நான் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii) –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு இவ்வழக்கு தொடர்பாக தகவல் வருவதற்கு முன்னரே அ.சா.1 புகார் அளித்துவிட்டார். அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களை கடந்த 30.01.2018 அன்று சம்பவ இடத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். அ.சா.1 சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி இல்லை என்றால் சரியல்ல, அவர் கண்ணுற்ற சாட்சி தான். சம்பவத்தை நேரில் பார்த்ததாக அ.சா.1 புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை, ஆனால் எனது விசாரணையின்போது கூறினார்.

2. எதிரிகள் அ.சா.1 யை ஆபாசமாக பேசியதாக அ.சா.1 எனது விசாரணையின்போது குறிப்பிடவில்லை. அவரை ஆபாசமாக பேசியதாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருந்தால் அது தவறு என்றால் சரிதான். புகார் மனுவில் சம்பவ இடம் எது என்பது குறிப்பாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் அ.சா.1 ன் குடும்பத்திற்கும் இடையே நிலம் தொடர்பாக முன் விரோதம் இருந்து வந்தது எனது விசாரணையில் தெரிய வந்தது.

3. எதிரிகள் கொடுவா கத்தியால் தாக்கியதாகத்தான் புகார் மனு மற்றும் எனது விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆயுதங்களை நான் கைப்பற்றி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிகள் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் மருத்துவரிடம் எதிரிகள் அவர்களை எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்பதை எனது விசாரணையின்போது மருத்துவரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அ.சா.2 செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் எடுத்துக்கொண்டதாக எனது விசாரணையில் தெரிய வந்தது.

3. பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் நீதிமன்ற சாட்சியத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக

சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் அது தவறு. சம்பவ இடத்தில் கல்லால் கட்டப்பட்ட கொட்டகை இருந்தது என்றால் அது விவரம் தெரியவில்லை. சம்பவ இடத்திற்கு நான் சென்றிருந்தால் மேற்படி விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் அதனை நான் வரைபடத்திலும் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் சரியல்ல. சம்பவத்தன்று இரவு அ.சா1 முதல் அ.சா.3 ஆகியோர்களை மருத்துவமனையில் விசாரித்ததாக மேறப்டி நபர்கள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் சரியல்ல, அ.சா.1 யை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன் அ.சா.2 மற்றும் அ.சா.3 யை மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன்.

4. அ.சா.2 பரசுராமன் மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால் ஆமாம். அவர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்றுக்கொண்டார். மேற்படி அ.சா.2 யிடம் நான் முண்டியம்பாக்கத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பெற்றேனா என்றால் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய இருவரையும் அங்கு வைத்து விசாரித்து தான் வாக்குமூலம் பெற்றேன். அ.சா.2 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் நான் மருத்துவமனைக்கு சென்று அவரை விசாரிக்கவில்லை என்றும் போன் மூலம் விசாரித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

5. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்னரே நான் வழக்கின் விசாரணையை தொடங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 நான் குறிப்பிட்டவாறு புகார் கொடுத்துள்ளார் என்றாலும், அதனை அடிப்படையாக கொண்டு நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நான் இவ்வழக்கு தொடர்பாக சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், அ..சா.1 முதல் அ.சா.6 ஆகியோர்களை நான் விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.